# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
# மற்றும்
# இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை-திருவள்ளூர் மாவட்டம்

(16.11.2016 முதல் 20.11.2016 வரை)

**கடந்த நான்கு நாட்களில் நிலவிய வானிலை (11.11.2016 முதல் 14.11.2016)**

திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த நான்கு நாட்களாக வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்பட்டது. 1.2 மி.மீ அளவு மழை பெய்தது. அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை முறையே 31.0-32.0°C மற்றும் 23.0-26.0°C என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 60 முதல் 94 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 2-4 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| தேதி | 16.11.2016 | 17.11.2016 | 18.11.2016 | 19.11.2016 | 20.11.2016 |
|---|---|---|---|---|---|
| மேகமூட்டம் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் |
| மழை பொழிவு (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| காற்றின் வேகம் கி.மீ/ மணிக்கு | 3 | 3 | 3 | 3 | 3 |
| காற்று வரும் திசை | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு |
| வெப்பநிலை°C | | | | | |
| அதிகபட்ச வெப்பநிலை°C | 33 | 33 | 33 | 33 | 33 |
| குறைந்த பட்ச வெப்பநிலை°C | 25 | 25 | 25 | 25 | 25 |
| ஈரப்பதம் | 75-82 | 75-82 | 75-82 | 75-82 | 75-82 |

**பண்ணையாளர்கள் அடுத்த ஐந்து நாட்கள் மேற்கொள்ள வேண்டிய வேளாண்மை மற்றும் கால்நடை மேலாண்மை முறை பற்றிய ஆலோசனை.**

1. கால்நடைகளின் கொட்டகையை மேடான பகுதியில் அமைப்பதன் மூலம் மழை பெய்யும் நாட்களில் தண்ணீர் தேங்காமல் உலர்ந்த நிலையில் பார்த்துக்கொள்ளலாம்.
2. உழவர்கள் தங்களின் கால்நடைகளுக்கான கொட்டகையின் கூரையிலிருந்து தண்ணீர் ஒழுகாதவாறும் மேலும் கொட்டகைச் சுற்றிலும் தண்ணீர் தேங்காத வண்ணம் வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
3. கால்நடைகளை ஏரி மற்றும் குளங்களில் உள்ள புற்களை மேயாமல் பார்த்துக்கொள்வதன் மூலம் தட்டைப் புழுக்களின் தாக்கத்தினை கட்டுப்படுத்தலாம்.
4. செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
5. உழவர்கள் தங்களுடைய கறவை மாடுகளின் மடியை நன்றாக கழுவி மற்றும் உலர்த்தி பால்கறக்கவும் மேலும் பால் கறந்த பின்பு தூசி அதிகமுள்ள உலர்தீவனம் அளிப்பதை தவிர்ப்பதன் மூலம் மடிவீக்க நோய் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.

**வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு வானிலைக்கேற்ப மேலாண்மை முறைகள்**

**முக்கிய பயிர்கள்:** நெல், கரும்பு மற்றும் வேர்க்கடலை

1. நெற் பயிரில் குலை நோயைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு கிராம் அல்லது ஒரு மி.லி கார்பன்டாசிம் 50 WP அல்லது டிரைசைக்ஸோல் 75 WP அல்லது மெட்டாமினோஸ்ட்ரோபின் 20 SC அல்லது அசாக்ஸிஸ்ட்ரோபின் 25 SC என்ற அளவில் தெளிக்கவும்.
2. நெல் வயலில் பச்சைப் பாசியைக் கட்டுப்படுத்த மயில் துத்தநாகத்தை( Copper Sulphate ) 500 கிராம் என்ற அளவில் காடா துணியில் கட்டி நெல் வயலின் வாமடையில் வைக்கவும்.
3. ஒரு ஹெக்டர் நெற் பயிருக்கு அடி உரமாக 80 கிலோ யூரியா+300 கிலோ சூப்பர் பாஸ்பேட் + 20 கிலோ பொட்டாஷ் மற்றும் 25 கிலோ ஜின்க் சல்பேட் (தனியாக) உரத்தினை நடவுக்கு முன் இடவும்.
4. நெல் நாற்றங்காலில் இலைப்பேனை கட்டுப்படுத்த பாஸ்போமிடான் 40 SL லிட்டருக்கு 1 மி.லி அல்லது குளோரிபைரிபஸ் 20 EC லிட்டருக்கு 2 மி.லி தெளிக்கவும்.